**சீ.டபிள்யூ.ஈ. நிர்மாணம் மற்றும் பொறியியல் (தனியார்) கம்பனியின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை – 2021, 2022 மற்றும் 2023**

---

சீ.டபிள்யூ.ஈ. நிர்மாணம் மற்றும் பொறியியல் (தனியார்) கம்பனியின் 2021, 2022 மற்றும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு வழிகாட்டியின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம்**

கம்பனியால் இறுதியாக தயாரித்த 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **நிதிக்கூற்றுக்களின் விடயங்கள்** | **பெறுமதி** |
|---|---|
| | ரூபா |
| சொத்துக்கள் | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 55,572,787 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 216,482,032 |

| | |
|---|---|
| | ------------------- |
| **மொத்த சொத்துக்கள்** | **272,054,819** |
| | =========== |
| உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | |
| உரிமை மூலதனம் | 13,553,260 |
| பொறுப்புக்கள் | |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | - |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 258,501,559 |
| | ------------------ |
| **மொத்த உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | **272,054,819** |
| | ========= |
| மொத்த வருமானம் | 60,302,442 |
| மொத்த செலவினம் | (63,276,790) |
| | ----------------- |
| **வரிக்கு முன் நட்டம்** | **(2,974,348)** |
| | ========== |

## 2.3 கணக்குகள் மற்றும் பதிவேடுகளைப் பேணிச் செல்லல்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்காக கொடுப்பனவு காசேடு சமப்படுத்தப்படாதிருந்ததுடன் பெறுவனவுக் காசேடும் அந்த ஆண்டுகளில் பேணிச்செல்லப் பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் முறையான பிரகாரம் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்காக வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | மாதாந்தம் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | காணப்படுகின்ற கணக்கீட்டு முறைமை 2024 சனவரியில் நாளதுவரையாக்கப்பட்ட போதிலும் 2023 மே வரையிலான கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரமே முறைமையில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | கொடுக்கல் வாங்கல்கள் பதிவுசெய்யப்பட்டு முறைமை நாளதுவரையாக்கப்படல் வேண்டும். |

## 2.4 கணக்காய்விற்கான தகவல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான காசேடு, கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் மற்றும் பற்றுச் சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்புடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டிக் கோவை | | | |
| (i) | 2.2.2 ஆம் பிரிவு | மாதத்திற்கு ஒரு முறையாவது சபைக் கூட்டம் தவறாமல் நடைபெறுவதை தலைவர் உறுதிசெய்தல் வேண்டும். எனினும் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே 03, 04 மற்றும் 04 கூட்டங்கள் மாத்திரமே கூட்டம் நடைபெற்றிருந்தன. | பதிலளிக்கப்படவில்லை. | வழிகாட்டியின் பிரகாரம் சபைக் கூட்டம் நடைபெறல் வேண்டும். |
| (ii) | 2.3 ஆம் பிரிவு | 2012 ஆம் ஆண்டு முதல் கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | வழிகாட்டியின் ஏற்பாடுகளின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 4.2 ஆம் பிரிவு | கம்பனியால் கணக்காய்வுக் குழு ஸ்தாபிக்கப்படடிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | வழிகாட்டியின் பிரகாரம் கணக்காய்வுக் குழு ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |
| (iv) | 4.4 ஆம் பிரிவு | கம்பனியால் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வாளரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெளியிடப்பட்ட பொது முயற்சிகளின் செயற்பாட்டுக் கைநூல் | | | |
| (i) | 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | கம்பனிக்காக பதவியணியினர் மற்றும் ஆட்சேர்த்தல் நடைமுறை தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | பதவியணியினர் மற்றும் ஆட்சேர்த்தல் நடைமுறை தயாரித்து அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 6.7 ஆம் பிரிவு | நிலையான சொத்துக்களுக் கான வருடாந்த சொத்து மெய்மையாய்வு மேற்கொள் ளப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | செயற்பாட்டு கைநூலின் பிரகாரம் சொத்துக்கள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (iii) | 7.5 ஆம் பிரிவு | மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை வரிசை அமைச்சிற்கும், பொதுத் திறைசேரிக்கும் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | செயற்பாட்டு கைநூலின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்திற்குரிய கட்டிடமொன்றில் இக் கம்பனி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. எனினும் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | கட்டிடத்திற்காக வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைகள் வழிகாட்டியின் 4.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியால் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். எனினும் 2021, 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்காக பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 10,511,977 கூட்டுத்தொகையான 09 பெறுகைகளின் பெறுகைக் குழு அறிக்கைகளை உள்ளடக்கி பெறுகைக் கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | பெறுகைக் குழு அறிக்கைகளை உள்ளடக்கி பெறுகைக் கோவைகள் |

| | | |
|---|---|---|
| | | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 07 ஆக இருந்ததுடன் அதில் பதிற்கடமை அடிப்படையில் 03 நியமனங்களும், அமைய அடிப்படையில் 04 நியமனங்களும் வழங்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கும், தேவையான உத்தியோகத்தர்களை நிரந்தர அடிப்படையில் நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பினால் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த அமைப்பிற்குரிய சகல நாடுகளினதும் பொருளாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்புத் திட்டத்தின் அடிப்படையிலாக இருக்க வேண்டியிருந்த போதிலும் கம்பனி அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் என்பவற்றை அறிமுகப்படுத்தாதிருந்ததுடன் சரியான தரவுகளுக்கான நுழைவும் காணப்படவில்லை. பௌதீக வள முகாமைத்துவ முறைமையும் 2023 ஆம் ஆண்டு வரையிலும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை அறிமுகப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |